MCOP.No. 12/24
Date : 26.03.2026
Pw – 1
பெயர்: சுல்தான் சையது இப்ராகிம்
த/பெ: ரசித்முகமது

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

தாவா விபத்தில் இரண்டு வாகனங்கள் சம்மந்தப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். நான் ஓட்டி சென்ற வாகனம் சரக்கு வாகனம் ஆகும். எனது வயது, வருமானம், தொழில் ஆகியவகைளை காட்டுவதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை. விபத்து நடந்தவுடன் என்னை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள். அங்கு 10 நாட்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். அங்கிருந்து பூரணமாக குணமான பின்புதான் மருத்துவ விடுவிப்பு செய்யப்பட்டேன். நான் யாரிடம் வேலை செய்து வந்தேன் என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. தாவா விபத்தில் எனக்கு ஊனம் எதுவும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா விபத்தினால் எனக்கு வருமான இழப்பு எதுவும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் வேறு நீதிமன்றத்தில் விபத்து சம்மந்தமாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. தாவா விபததிற்கு நான்தான் காரணம் என்று சொன்னால் சரியல்ல. அதனால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு அதிகபடியானது என்று சொன்னாலும் அடிப்படை ஆதரவு அற்றது என்று சொன்னாலும் சரியல்ல.

**4ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள மனுவிலும் இதர ஆவணங்களிலும் 1, 2 எதிர்மனுதாரர்கள் மீது தான் கோரிக்கை வைத்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். புகார் மற்றும் இறுதி அறிக்கை 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் மீது தான் பதியப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். விபத்து சம்மந்தமாக என் மீது குற்ற நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. விபத்துசமயத்தில்

என்னுடைய சரக்கு வாகனத்திற்கு அனைத்து ஆவணங்களும் நடைமுறையில் இருந்து வந்தது. இந்த வழக்கை பொறுத்து 3,4 எதிர்மனுதாரர்ளுக்கு எதிராக தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

Sd/– சுல்தான் சையது இப்ராகிம்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.